2022 ஏப்ரல் 7]

70—

சார் கருவூல அலுவலகத்திற்குக் கட்டடம்

***3088—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் சார்நிலைக் கருவூல அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, குடவாசல் சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு குடவாசல் வட்டத்தில் 0.0475 ஹெக்டேர் நிலம் அதாவது, 5,113 சதுர அடி அளவில் குடவாசல் வட்டாட்சியர் அவர்களால் இடம் தெரிவு செய்யப்பட்டு, சார்நிலைக் கருவூலத்திற்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக வருவாய்க் கோட்ட அலுவலர், திருவாரூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என கருவூல அலுவலர், திருவாரூர் அவர்கள் தெரிவித்துள்ளார். இந்த நிலம் சார்நிலைக் கருவூலத்திற்கு எப்போது நிலமாற்றம் செய்யப்படுகிறதோ, அப்போது நன்னிலம் தொகுதி, குடவாசல் சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருவாரூர் மாவட்டம், என்னுடைய நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குடவாசல் பகுதியில் சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு 5,113 சதுர அடி நிலம் தேர்வு செய்யப்பட்டு*

அந்த இடம் கோட்டாட்சியர் அனுமதிக்காக, நிலமாற்றம் செய்வதற்காகச் சென்றிருக்கிறது என்று சொன்னார்கள். ஓராண்டு காலமாக கோட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைக்காக அது நிலுவையில் இருக்கிறது. எனவே, அதனை உடனடியாக முடித்து, விரைவில் கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதற்கு முக்கிய காரணம், அந்த சார்நிலைக் கருவூலமானது 1980 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. அது மிகவும் பழைய ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல், அது இரண்டு வட்டாரங்களை ஒருங்கிணைத்து, அதாவது குடவாசல், கொரடாச்சேரி ஆகிய இரண்டு வட்டாரங்களை (Blocks) ஒருங்கிணைத்த ஒரு வட்டமாக இருக்கிறது. அங்கு 2,745 அரசு ஊழியர்கள் சம்பளம் பெறுகிறார்கள், அதுபோல், 2,196 ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியத்தைப் பெறுகிறார்கள். ஒரு கோடியே 50 இலட்சம் அளவில் முத்திரைத் தாள்கள். . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. இரா. காமராஜ்: பராமரிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, மழைக் காலங்களில், வெள்ளத்தால் அவை பாதிக்கப்பட்டுவிட்டால், அதிக பாதிப்புகள் ஏற்பட்டுவிடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக சில புள்ளிவிவரங்களுடன் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். அதனடிப்படையில், உடனடியாக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், வருவாய்த் துறைச் செயலாளர், Commissioner of Land Administration (CLA) ஆகியோருடன் கலந்தாய்ந்து, இந்த மாற்றத்தை உருவாக்க, கூடிய விரைவில் இந்தப் பணியைத் துவங்கவிருக்கிறோம்.

நேரத்தின் அருமை கருதி, இதேபோல் கூடுதல் கட்டடங்களுக்கான கேள்விகள் வரும்பட்சத்தில் சில கருத்துகளை இங்கே நான் பகிர்ந்துகொள்கிறேன்.

2022 ஏப்ரல் 7]

பொதுவாக, எங்கள் தலைவர் எங்களுக்கு வழிகாட்டுவது என்னவென்றால், எந்தக் கொள்கையில் ஆரம்பிக்கின்றோமோ அதையும், இருக்கின்ற புள்ளிவிவரங்களையும் வைத்து அதிலிருந்து திட்டம், செயல்முறை எல்லாம் கொண்டு வரவேண்டும். அந்த அடிப்படையில், நிதித் துறை என்பது, எல்லாத் துறைகளின் செலவையும் கட்டுப்படுத்துகிற துறை. நாங்களும் மிகவும் தெளிவாக, எங்களின் செலவினங்களையும் கட்டுப்படுத்துவது கடமை. இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை, 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இல்லம் தேடி கல்வி' என்று போகக்கூடிய சூழ்நிலையில், ஏற்கெனவே, முழு computerisation கொண்டுவந்த சூழ்நிலையில், அனைத்து ஓய்வூதியதாரர்களின் வங்கிக் கணக்குகளும் இருக்கக்கூடிய சூழ்நிலையில், internet penetration என்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாட்டிலேயே கூடுதலாக 75 சதவிகிதம் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், இங்கேயிருந்த computers–ஐ எல்லாம் ஆங்காங்கே இருக்கின்ற MLA office–க்கு அனுப்பி, இ–சேவை மையம் தொடங்கலாம் என்ற கருத்து இருக்கின்ற சூழ்நிலையில், முடிந்த அளவிற்கு எந்தவொரு குடிமகனும் அலுவலகத்தைத் தேடி வரத் தேவையில்லாத அளவிற்கு திட்டம் தீட்டுவது இந்த அரசின் இலக்காக இருப்பதால், அதற்கேற்பதான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) கட்டடம் கட்டுவதில் பல பிளவுகள் ஏற்படுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 100 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கட்டடம் கட்டப்பட்டது; சிறப்பாக இருக்கிறது. ஆனால், பல இடங்களில், 30, 40 வருடங்களுக்குள் கட்டப்பட்ட கட்டடங்கள் பாழடைந்து போயிருக்கின்றன.

முற்பகல் 10–55

அதனால் அவற்றைத் திரும்பவும் கட்டுவது அவசியமாகிறது. கட்டுவது சுலபம், அதைப் பராமரிப்பது கஷ்டம் என்ற சூழ்நிலையில், திரும்பத் திரும்ப நமக்கு பிரச்சினை வந்துகொண்டிருக்கிறது. அதற்கும்மேல் எங்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. சராசரியாக, 35, 40 சதவிகிதம் பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவே தவிர, பெரிய மாநகரங்களில் 100 சதவிகித பணியிடங்கள் fill ஆகியிருக்கின்றன. அங்கேயெல்லாம் பணியாற்றுவது ரொம்ப சுலபம். மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலிருந்து, transfer–க்கு நிறைய கோரிக்கைகள் வருகின்றன. என்ன பிரச்சினை வருகிறது என்றால், புறநகரங்களில்,

remote areas–ல் யாரும் பணியாற்றுவதற்கு விரும்புவதுமில்லை, போவதுமில்லை. ஆனால், கட்டடம் கட்டினாலும் அங்கே பணியாற்ற அலுவலர்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது. அதனால் முடிந்த அளவிற்கு Internet மூலமாகவும், இல்லை என்றால் வீட்டை தேடிக்கொண்டுபோய் கொடுக்கின்ற பணிகளை நாங்களாகவோ அல்லது வங்கிகளோடு இணைந்தோ எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்குச் செய்வதற்கு கொள்கை அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், நிலுவையில் இருக்கிற பணிகளை நிறுத்தமாட்டோம். எவை எல்லாம் திட்டமிடப்பட்டனவோ அல்லது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டனவோ அவற்றையெல்லாம் முடித்துக் கொடுத்துவிடுவோம். ஆனால், புதியதாக கட்டடம் கட்டுவதற்கு மிகவும் சிந்தித்துத்தான் செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, வடகிழக்குப் பருவமழையால் மிகப் பெரிய அளவில் ஆண்டுதோறும் பாதிக்கப்படும் மாவட்டமாக இருக்கிறது. எனவே, என்னுடைய மாவட்டத்தில் இருக்கிற குடவாசலைப்போல, நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் இருக்கின்ற சார்நிலைக் கருவூலங்களும் பழைய ஓட்டுக் கட்டடங்களில் இயங்குகின்றன. எனவே, இவற்றிற்கு மாற்றாக புதிய கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கருத்திற்கு ஏற்ப செயல்படுவோம். கூடுதலாக ஒரு கருத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு சில ஆய்வுகள் செய்தபோது, பல குக்கிராமங்களில், புறநகரங்களில்,*

2022 ஏப்ரல் 7]

தாலுகாக்களில்கூட அரசு கட்டடங்கள் வெவ்வேறு இடங்களில் இருக்கின்றன. Collector Office*–ஐ எடுத்துக்கொண்டால், அதில்* integrated *ஆக* DRO *அலுவலகம்,* RDO *அலுவலகம் மற்றும்* ICDS *போன்ற* service*–ம் கிடைக்கின்ற மாதிரி இருக்கிறது. ஆனால்,* Panchayat level*–ல் போனால் ஊராட்சி* level*–ல் அலுவலகங்கள் விரிந்து ஆங்காங்கே பல்வேறு இடங்களில் இருக்கின்றன. அங்கு மக்களுக்கு ஒரே இடத்தில் சேவை கிடைப்பது கடினமாக இருக்கிறது. அதுவும் கொள்கை அடிப்படையில் முடிந்த அளவிற்கு எல்லா சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் கட்டுமானப் பணிக்கான செலவையும் குறைத்து, மக்களுக்கு கிடைக்கக்கூடிய சேவைகளை சுலபமாக கிடைக்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு* Finance Department*–ல் பொதுவாக ஒரு* guidance *கொடுத்திருக்கிறார். அந்த அடிப்படையில் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

நூலகங்களை நவீனப்படுத்துதல்

***9768—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் உள்ள நூலகங்களை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, தங்களது அனுமதியோடு விடையளிக்கிறேன். விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற நூலகங்கள் எல்லாம் நவீனமயமாக்கப்படுமா என்பது கேள்வி. ஆனால், ஏற்கெனவே அந்த தொகுதியில் இருக்கின்ற சாலிகிராமமாக இருந்தாலும் சரி,